**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 35/2022</u>**

பெயர் : விமலாதித்தன் P.W.2. Cross

த/பெ. : சோமு

தேதி : 23.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

1. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி கிரயம் பெற்ற சொத்தை மீண்டும் கிரயம் கொடுத்ததால் வேறு ஒரு நபருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் புல எண். 230/1 ஆகும். அதன் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு தெற்கில் மகேந்திரனின் இடமும், மேற்கில் அரசு கன்னியும், வடக்கில் மனோகரன் வயலும், கிழக்கில் அரசு புறம்போக்கு இடமும் உள்ளது. நான் வாதி வீட்டிற்கு பக்கத்து தெருவில் வசித்து வருகிறேன். தாவா சொத்தானது வயல் ஆகும். தாவா சொத்தில் பயிர் செய்ததற்கு வாதி பயிர் காப்பீடு பெற்றாரா என்றால் இல்லை.

2. வாதி பயிர் காப்பீடு செய்யாததாலும், பயிர் காப்பீடு வாங்காததாலும் அவர் தாவா சொத்தில் நெற்பயிர் சாகுபடி செய்யவில்லை என்றாலும் வாதி எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வராததாலும், வாதி அழைத்து வந்ததன் பேரில் நான் சாட்சியம் அளிப்பதாலும் நான் ஆதாய சாட்சி என்பதாலும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.